நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.99/2021
அரசு தரப்புக்காக அ. சா. 6 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர்.சித்ரா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 13 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 07th day of August 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 01.35 )

நான் தற்போது விருத்தாசலத்தில் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 30.09.2011 அன்று நான் விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்தபோது மங்கலம்பேட்டை காவல்நிலைய குற்ற எண்.255/2011 வழக்கில் சம்மந்தப்பட்ட பாலசுப்ரமணியன் மனைவி சுமார் 25 வயதுள்ள சத்யா என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்வதற்காக காவலர் சஞ்சீவ் 629 என்பவர் எங்கள் மருத்துவமனையில் ஆஜர் செய்து அடையாளம் காட்டிய பிரேதத்தின் அங்க அடையாளங்களை குறிப்பிட்டு என்னுடைய பிரேத பரிசோதனையை 30.09.2011 தேதியில் 01.00 மணிக்கு ஆரம்பித்தேன். கால்கள் இரண்டிலும் விரைப்பு தன்னை இருந்தது. கைகள் இரண்டிலும் விரைப்புத் தன்மை முழுமையாக இல்லை.

**<u>பிரேத பரிசோதனையின் முடிவுகள்</u>**

கை, கால்கள் சீரான நிலையில் இருந்த பெண்ணின் உடல் பின்பக்கமாக படுத்த நிலையில் படுக்க வைக்கப்பட்டு இருந்தது. மண்டை ஓடு, மூக்கு, பற்கள், நெஞ்சுக்கூடு, காதுகள் இயல்பாக இருந்தன. வாய், உதடு, கண் ஆகியவை மூடி இருந்தது.

**<u>வெளிப்புற காயங்கள்</u>**

1) முன் நெற்றியின் இடது புறத்தில் 3x 2 c.m அளவுள்ள சிராய்ப்பு காயம்

2) வலது முன்கையில் 4 x 2 c.m அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3) கழுத்தில் 6 x 3 c.m அளவுள்ள கயிற்று தடயம் ( Ligature mark ) கழுத்தின் முன்பகுதி (Thyroid Cartilage) என்ற பகுதியில் காணப்பட்டது. அந்த கயிற்று தடயம் ஆழமாக இல்லை.

**<u>உட்புற காயங்கள்</u>**

1) வயிறு, நெஞ்சுக்கூட்டு எலும்பு, நாவடி எலும்பு (Hyoid bone) ஆகியவை இயல்பாக இருந்தது.

2) இருதயத்தின் அறைகள் காலியாக இருந்தது.

3) நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் சிவந்து இருந்தன.

4) கர்ப்பப்பையின் உட்பகுதி காலியாக இருந்தது.

5) மண்டைஓடு, மூளை, மூளை ஜவ்வு பகுதி மற்றும் தண்டுவடம் இயல்பாக இருந்தது.

6) இரைப்பையின் உள்ளே 150 மி.லி கிராம் அளவுள்ள பகுதியாக செரிக்கப்பட்ட உணவு பொருட்கள் இருந்தது.

7) மலம் வெளியேறி இருந்தது.

உடல் உள்உறுப்பு மற்றும் நாவடி எலும்பு பகுப்பாய்விற்காக சேகரம் செய்யப்பட்டு ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்புவதற்காக ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனை மதியம் 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இறப்பு நேரம் பிரேத பரிசோதனைக்கு 24 மணி நேரத்திற்கு குறைவாக இருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளேன். உள்உறுப்பு பரிசோதனை முடிவுகள் கிடைத்த பின்னர் என்னுடைய இறுதி கருத்துரையை பிரேத பரிசோதனை அறிக்கையின் பின்புறத்திலேயே குறிப்பிட்டுள்ளேன். உள்உறுப்பு பரிசோதனையில் விஷம் எதுவும்

கண்டறியப்படவில்லை. Hyoid bone எலும்பு இயல்பாக இருந்தது. என்னுடைய கருத்துரையாக இறந்தவர் தூக்கிட்டு தொங்கியதால் ஏற்பட்ட மூச்சு திணறல் காரணமாக இறந்திருக்கலாம் என இறுதி கருத்துரை வழங்கினேன். (நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அதன் பின்புறத்தில் இறுதி கருத்துரையுடன் கூடியது அந்த தட்டச்சு செய்யப்பட்ட நகல் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டு தாள்கள் அடங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Viscera Report **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Hyoid Bone Report **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வெளிப்புற காயங்கள் இறப்பிற்கு முன் ஏற்பட்டதா அல்லது இறப்பிற்கு பின் ஏற்பட்டதா என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 01.54 )

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.